Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

நடுநிலை நாளிதழ்
PRGI NO: TNBIL/25/A3556 ISO : 9001:2015; QT-57977/1125
DHINATH DHALAM Tamil & English daily Paper
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,
மலர் Volume : 01 · இதழ் Issue : 79 · செவ்வாய்க்கிழமை Tuesday · 20.01.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode

**செய்தியாளர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

# கலைஞர் பன்னாட்டு மாநாடு மையம் கட்டுமானப் பணி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆய்வு



சென்னை,

சென்னை, கலைவாணர் அரங்கத்தில், முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவையொட்டி 2.6.2023 அன்று நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு இலச்சினையை வெளியிட்டு விழாவில், நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பியான தலைவர் கலைஞர் பெயரால், சென்னையில் புதிய உலகத் தரம் வாய்ந்த பன்னாட்டு அரங்கம் அமைக்கப்படும் என்று முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். செங்கல்பட்டு மாவட்டம், முட்டுக்காடு, கிழக்கு கடற்கரை சாலையில் 37.99 ஏக்கர் நிலப்பரப்பில் 525 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 10,000 நபர்கள் அமரக்கூடிய அளவில் 90,384 சதுர அடி பரப்பளவில் பொருட்காட்சி அரங்கம், 5,000 நபர்கள் அமரக்கூடிய அளவில் 58,104 சதுர அடி பரப்பளவில் மாநாட்டு மண்டபம், 1,500 பார்வையாளர்கள் அமரக்கூடிய வகையில் கலையரங்கம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் 5,12,800 சதுர அடி மொத்த பரப்பளவில் கட்டப்பட்டு வரும் கலைஞர் பன்னாட்டு மாநாடு மையத்திற்கு முதல்-அமைச்சர் 29.5.2025 அன்று அடிக்கல் நாட்டினார். இந்த கலைஞர் பன்னாட்டு மாநாட்டு மையம் முழுவதும் குளிரூட்டும் வசதி மற்றும் மின் ஆக்கி வசதி, மின்தூக்கி வசதி, 1,638 சீருந்துகள் மற்றும் 1,700 இருச்சக்கர வாகனங்கள் நிறுத்தும் வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டு வருகிறது. தற்பொழுது பொருட்காட்சி அரங்கம், மாநாட்டு மண்டபம் மற்றும் கலையரங்கத்தின் பார்வையாளர் மாடம், மேடைகள் அமைக்கும் பணிகள் முடிவுற்று மேற்கூரைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகளான சுற்றுச்சுவர், அணுகு சாலைகள், வாகன நிறுத்துமிடம் மற்றும் மின்விளக்கு வசதிகள் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு 2026 நவம்பர் மாதம் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரதிட்டமிடப்பட்டுள்ளது. பணிகளை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டார். தரமாகவும், விரைவாகவும், குறித்த காலத்திற்குள் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என்று அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

# நிபா வைரஸ் குறித்து கண்காணிக்க அதிகாரிகளுக்கு அமைச்சர் மா.சுப்ரமணியன் அறிவுறுத்தல்



நிபா வைரஸ் குறித்து அனைத்து சுகாதார அலுவலர்களும் கண்காணிப்புடன் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் மா. சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

மேற்கு வங்கத்தில் பறவைகள் மூலமாக மனிதருக்கு ஏற்படும் நிபா வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுவரை 5 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து இந்தியாவில் மற்ற மாநிலங்களிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தமிழகத்தில் போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களுடன் பேசிய அவர்,

"நிபா வைரஸ் பரவல் தொடர்பாக எந்த மாதிரி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பது துறையின் சார்பில் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. நிபா வைரஸ் குறித்து அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட சுகாதார அலுவலர்கள் கண்காணிப்போடு இருக்க அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

ஆரம்ப சுகாதார நிலையங்கள், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைதலைமைமருத்துவர்கள் இதுதொடர்பாக விழிப்புணர்வுடன் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது" என்றார்.

முன்னதாக, மேற்கு வங்கத்தில் வேகமெடுத்துவரும் நிபாதொற்று காரணமாக பறவைகள், விலங்குகள் கடித்த பழங்கள், மற்றும் பதநீர் அருந்துவதைத் தவிர்க்குமாறு தமிழக பொது சுகாதாரத் துறை அறிவுறுத்தியுள்ளது.

தமிழ்நாட்டில் இதுவரை நிபா தொற்றின் தாக்கம் இல்லை என்றாலும் நாடு முழுவதும் கண்காணிப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையைத் தீவிரப்படுத்த மாநில அரசுகளுக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் இதுவரை அதன் தாக்கம் இல்லை என்றாலும், பொதுமக்கள் விழிப்புணர்வுடன் இருந்து நோய்த் தடுப்பு வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாகபொது சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் சோமசுந்தரம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: நிபா வைரஸ் என்பது விலங்குகள் மூலம் பரவும் ஒரு நோய் தொற்று. பழங்களை உண்ணும் வௌவால்கள், குதிரைகள், நாய்கள் மற்றும் பன்றிகள் மூலம் மனிதர்களுக்கு இது பரவுகிறது.

வௌவாலின் உமிழ்நீர் படர்ந்த பழங்களை உண்ணுவதன் மூலமாகவோ அல்லது பாதிக்கப்பட்ட நபருடன் நெருங்கிய தொடர்பு கொள்வதன் மூலமாகவோ நோய் தொற்று பரவுகிறது.

காய்ச்சல், தலைவலி, வாந்தி, குழப்பம், தூக்கமின்மை, மூச்சுதிணறல் அல்லது மயக்கம், வலிப்பு போன்றவை முக்கிய அறிகுறிகள். பாதிப்பு ஏற்பட்ட 6 முதல் 21 நாள்களுக்குள் அறிகுறிகள் தென்படும். குறிப்பாக மேற்கு வங்கத்தில் பாதிப்பு உள்ள பகுதிகளுக்கு பயணம் செய்த பிறகு அல்லது நோய்வாய்ப்பட்ட ஒருவரைத் தொடர்பு கொண்ட பிறகு, இதுபோன்ற அறிகுறிகள் யாரிடமாவது தோன்றினால், அவர்கள் உடனடியாக அருகிலுள்ள அரசு மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும்.

கழுவப்படாத அல்லது கீழே விழுந்த பழங்களை சாப்பிடுவதை மக்கள் தவிர்க்க வேண்டும். உணவு உட்கொள்வதற்கு முன்பாக சோப்பால் கைகளை கழுவ வேண்டும். பதநீர், கள்ளு போன்ற பானங்கள் அருந்துவதைத் தவிர்க்க வேண்டும்.

# கூட்ட நெரிசல் ஏற்பட்ட பின்னரும் பிரச்சாரம் மேற்கொண்டது ஏன்? த.வெ.க. தலைவர் விஜயிடம் சி.பி.ஐ. அடுக்கடுக்கான கேள்வி



கரூரில் கடந்த ஆண்டு (செப்டம்பர் 27) ஆம் தேதி தமிழக வெற்றி கழகம் சார்பில் நடத்திய பிரச்சார கூட்டத்தில் 41 பேர் உயிரிழந்த சம்பவம் நாட்டு மக்களிடையே பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இந்த சம்பவம் குறித்து வழக்கு தொடரப்பட்டு உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டு சிபியை விசாரணை நடைபெற்று வருகிறது.

சம்பவ இடத்தை நேரில் பார்வையிட்டு விசாரணை மேற்கொண்ட அதிகாரிகள் மேலும் கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள விருந்தினர் மாளிகையில் தங்கி அதிகாரிகள் மக்களிடம் விசாரணை மேற்கொண்டு வந்தனர்.

இதனை தொடர்ந்து தமிழக வெற்றி கழகத்தின் தலைவரை விசாரணை ஆஜராக சொல்லி சம்மன் அனுப்பப்பட்ட நிலையில் முதற்கட்டமாக கடந்த (ஜன 12) தேதி விஜய் டெல்லியில் உள்ள சிபிஐ தலைமை செயலகத்தில் விசாரணை ஆஜரான நிலையில் அவரிடம் சுமார் 7 மணி நேரம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அதனை தொடர்ந்து பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இரண்டாம் கட்ட விசாரணை விஜய்யின் கோரிக்கையின் பேரில் ஒத்திவைத்த சிபிஐ அதிகாரிகள் இன்று மீண்டும் விஜய்யை ஆஜராக சொல்லி சம்மன் அனுப்பி இருந்தனர்.

எனவே இன்று மீண்டும் டெல்லி சிபிஐ தலைமை செயலகத்தில் விசாரணைக்காக ஆஜரான விஜய்யிடம் அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். கூட்டத்திற்கு தாமதமாக வந்தது ஏன்? கூட நெரிசல் இருந்ததை நீங்கள் கவனிக்கவில்லையா? கூட்ட நெரிசல் ஏற்பட்ட பின்னரும் பிரச்சாரம் மேற்கொண்டது ஏன்? குறிப்பிட்ட அளவை விட அதிக மக்கள் கூடியதற்கான காரணம் என்ன? தண்ணீர் பாட்டில்களை கொடுக்கும்போது கூடவா கூட நெரிசலை கவனக்கவில்லை? என சிபிஐ அதிகாரிகள் விஜயிடம் கேள்வி எழுப்பியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதில் ஒரு சில கேள்விகளுக்கு விஜய் பதிலளித்த நிலையில் மேலும் சில கேள்விகளுக்கு பதிலளிக்க நேரம் கேட்டிருப்பதாகவும், "நான் முழுமையாக தமிழக காவல்துறையினர் வழிகாட்டுதலுக்கு இணங்க" நடந்து கொண்டதாக தெரிவித்தார். என சொல்லப்படுகிறது. இந்நிலையில் கரூர் விவகாரத்தில் அடுத்த மாதம் சிபிஐ குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய முடிவெடுத்துள்ளதாக தெரிவிக்கப்படும் நிலையில் அதில் விஜய்யின் பெயர் இடம்பெற உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# நாளுக்கு நாள் புதிய உச்சம் தொடும் தங்கம் விலை



தங்கம் விலை கடந்த மாதம் (டிசம்பர்) 15-ந்தேதி ஒரு சவரன் ரூ.1 லட்சத்தை தாண்டியது. அதன் பின்னர் விலை குறைந்த நிலையில், அதே மாதம் 22-ந்தேதியில் இருந்து மீண்டும் ஏறுமுகத்தில் பயணித்தது. கடந்த மாதம் 28-ந்தேதி புதிய உச்சத்தை தொட்டு, பிறகு விறுவிறுவென இறங்கியது. அப்படியாக விலை குறைந்து வந்து, கடந்த ஒரு வாரமாக மீண்டும் ஏற்றத்திலேயே தங்கம் விலை இருந்து வருகிறது.

நேற்று முன்தினம் தங்கம் விலை சற்று அதிகரித்தது. அதன்படி சென்னையில் ஆபரணத்தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.400 அதிகரித்து, ஒரு சவரன் ரூ.1,06,240-க்கு விற்பனை செய்யப்பட்டது. கிராமுக்கு ரூ.50 அதிகரித்து, ஒரு கிராம் ரூ.13,280-க்கு விற்பனை செய்யப்பட்டது. தங்கத்தை போலவே வெள்ளி விலையும் சற்று உயர்ந்தது. வெள்ளி விலையை பொறுத்தவரையில், ஒரு கிலோ வெள்ளி ரூ.4,000 அதிகரித்து, ரூ.3,10,000-க்கும், கிராமுக்கு ரூ.4 அதிகரித்து. ஒரு கிராம் ரூ.310-க்கும் விற்பனை செய்யப்பட்டது.

இந்நிலையில் தங்கம் விலை புதிய உச்சத்தை தொட்டுள்ளது. அதன்படி சென்னையில் ஆபரணத்தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.1,360 அதிகரித்து, ஒரு சவரன் ரூ.1,07,600-க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிராமுக்கு ரூ.170 அதிகரித்து, ஒரு கிராம் ரூ.13,450-க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

**வெள்ளி விலை**

தங்கத்தை போலவே வெள்ளி விலையும் உயர்ந்துள்ளது. வெள்ளி விலையை பொறுத்தவரையில், ஒரு கிலோ வெள்ளி இன்று ரூ. 8,000 அதிகரித்து, ரூ.3,18,000-க்கும், கிராமுக்கு ரூ.8 அதிகரித்து. ஒரு கிராம் ரூ.318-க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



# உளுந்தூர்பேட்டை சாய் அப்போலோ கல்வி நிறுவனம் சார்பில் அரசு மறுவாழ்வு இல்லத்தில் சமத்துவ பொங்கல் விழா

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டைசாய்அப்போலோ சமுதாயக் கல்லூரி சார்பில், உளுந்தூர்பேட்டை அருகே உள்ள வெள்ளையூர்அரசுமறுவாழ்வு இல்லத்தில் வசிக்கும் முதியோர்களுடன் சமத்துவபொங்கல்விழா சீரும் சிறப்புமாகக் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு கல்லூரியின் நிறுவனர் மருத்துவர் தங்கதுரை தலைமை தாங்கினார். கல்லூரியின் இயக்குனர் அம்பிகா தங்கதுரை முன்னிலை வகித்தார். கல்லூரியின் தலைமை நிர்வாகி ஆசிரியர் ஆனந்த ஜோதி மற்றும் கல்லூரி முதல்வர் பிரியதர்ஷினி ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.

விழாவின் ஒரு பகுதியாக மறுவாழ்வு இல்லத்தில் வசிக்கும் முதியோர்களுடன் இணைந்து பொங்கல் வைத்து, ஆடல்-பாடல் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு அவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினர். தொடர்ந்து ஆதரவற்ற முதியோர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மாணவிகளுக்கான பொங்கல் சிறப்பு போட்டிகள் நடத்தப்பட்டு, இதில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் பண்ருட்டி கல்லூரி முதல்வர் சுஷ்மிதா,ஆசிரியர்ராதா, மனிதம் காப்போம் அறக்கட்டளை சார்பில் விஜய் செல்வா மற்றும் மணிவண்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

# பெரியகுளம் மேல்மங்கலத்தில் எம்.ஜி.ஆரின் 109வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்



தேனி மாவட்டம் பெரியகுளம்ஒன்றியம்மேல்மங்கலத்தில் மறைந்த முன்னாள் முதல்வர் எம்ஜிஆர் அவர்களின் 109வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது .இந்த கூட்டத்திற்கு மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் அன்ன பிரகாஷ் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் ராஜகுரு பெரியகுளம் நகர கழகச் செயலாளர்பழனியப்பன் தலைமைதாங்கினர். தேனி நகர கழகச் செயலாளர்கிருஷ்ணகுமார் மாவட்ட விவசாய அணி செயலாளர் லட்சுமணன் வரவேற்புரையாற்றினர் சிறப்பு பேச்சாளர்களான தேனி கிழக்குமாவட்ட கழக செயலாளர் முறுக்கோடை ராமர் கழக அமைப்புச் செயலாளர் சீனிவாசன் தலைமைக் கழக பேச்சாளர் வி.சி மணிமுரசு தலைமை கழக பேச்சாளர் பூவை செழியன் ஆகியோர் சிறப்புரையாற்றினர் பெரிய வீரன், முத்துலட்சுமி, செல்லப்பாண்டி, பொதுக்குழு உறுப்பினர் வி .கே .தவமணி கருப்பசாமி, பேரூர் கழகச் செயலாளர்கள் பாலமுருகன்,ஆண்டவர், இளைஞர் அணி இளம் பெண் பாசறை அப்பாஸ் மைதீன் மற்றும் கழக உறுப்பினர்களும் பொதுமக்களும் திரளாக கலந்து கொண்டு இந்த கூட்டத்தினை சிறப்பித்தனர்.

# மதுராந்தகத்தில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்கும் பொதுக்கூட்டம்

## அதிமுக அண்ணா தொழிற்சங்க மாநில செயலாளர் கமலக்கண்ணன் பார்வையிட்டு ஆய்வு



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் இம்மாதம் 23ஆம் தேதி தேசிய ஜனநாயக கூட்டணி (NDA) சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில் பாரத பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் பங்கேற்று சிறப்புரை ஆற்றுள்ளார்.

இந்த நிகழ்ச்சியில் அதிமுகவில் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொள்ள உள்ளனர்.

இந்த நிலையில் தற்பொழுது விழா மேடை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது இந்தப் பணியினை அண்ணா தொழிற்சங்க மாநில செயலாளர் கமலக்கண்ணன், செங்கல்பட்டு கிழக்குமாவட்டபொறுப்பாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சீனிவாசன் கழக அமைப்பு செயலாளர் வாலாஜாபாத் கணேசன்,செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட அண்ணா தொழிற்சங்க செயலாளர் வினோத் ஆகியோர் மேடை அமைக்கும் பணியினை பார்வையிட்டு வாகனங்கள் நிறுத்தும் இடத்தை பார்வையிட்டனர். இந்த நிகழ்ச்சியில் மதுராந்தகம் நகர கழக செயலாளர் பூக்கடை கே சி சரவணன் மற்றும் அதிமுக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.





# தூத்துக்குடி வடக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவராக பெருமாள்சாமி நியமனம்

தமிழ்நாடு மாநில ஐ.என்.டி.யூ.சி பொதுச் செயலாளரும் காங்கிரஸ் கட்சி மாநில பொது குழு உறுப்பினர்,க.பெருமாள்சாமி தூத்துக்குடி வடக்கு மாவட்ட காங்கிரஸ்தலைவராகஅதிரடியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

சமீபத்தில் தமிழகத்தில்புதியமாவட்டதலைவர்களை நியமிக்க, பிற மாநிலங்களிலிருந்து மேலிடப் பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டு, நிர்வாகிகளை மாற்றி அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வந்தன அதன் அடிப்படையில் தூத்துக்குடி மாவட்டத்தில் மேலிடப் பார்வையாளர்கள் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டனர்.

மேலும் மாவட்டத் தலைவர்களின் செயல்பாடுகள் குறித்து உள்ளூர் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களிடம் கருத்து கேட்டார்கள் அதன்படி தூத்துக்குடி மாவட்டத்தில் பல்வேறு கருத்து கேட்புக்கு பின்பு இளைஞர் என்ற முறையிலும், கட்சிப் பணியில் தீவிரமாக செயல்பட்டு வருபவர் என்ற அடிப்படையிலும் க.பெருமாள்சாமி கட்சி செயல்பாடுகளில்சிறந்து விளங்கி வருவதாலும் காங்கிரஸ் தொண்டர்கள் முதல் நிர்வாகிகள் வரை அனைவரிடமும் அன்பாகவும், எளிமையாக பழக கூடியவர் என்ற நற்பெயரை பெற்ற பெருமாள்சாமியின் சிறப்பான செயல்பாடுகள் குறித்து அகில இந்தியத் தலைமையின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு, புதிய மாவட்டத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் பெருமாள்சாமி தலைமையில் நடைபெறும் எந்த ஒரு பொதுக்கூட்டம்,போராட்டங்கள், ஆர்ப்பாட்டம்,என எந்த நிகழ்ச்சி காங்கிரஸ் சார்பில் நடைபெற்றாலும் அதில் காங்கிரஸ் இயக்கத்தின் மூத்த நிர்வாகிகள் முதல் இளைஞர்கள், மகளிர்கள் என ஒரு பெருந்திரமான கூட்டம் எழுச்சி உடன் காணப்படும் அந்த அளவிற்கு காங்கிரஸ் பேரியக்கத்தில் தன்னை ஈடுபடுத்தி சிறப்பாக செயல்பட்டு விளங்கி வருகிறார் பெருமாள்சாமி அதோடு மட்டுமல்லாமல் பெருந்தலைவர் காமராஜரை மிகவும் நேசிக்கக் கூடியவர் இவர் சமீபத்தில் காமராஜரை இழிவாக பேசியதாக திருச்சி

முக்தார் சிவா, யூடியூப்பர் ஆகியோரை கண்டித்து நடத்திய ஆர்ப்பாட்டம் தூத்துக்குடி மாவட்ட வணிகர்கள், பொதுமக்கள், உட்பட அனைத்து தரப்பு மக்கள் மத்தியிலும் மிகுந்த வரவேற்பு பெற்றது.

தொடர்ந்துபெருமாள்சாமி தனது கண்டனத்தை பதிவு செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இது போன்றுஅவரதுசெயல்பாடுகள் ஏராளம் இதனை கருத்தில் கொண்டு தான் தூத்துக்குடி வடக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவராக பெருமாள்சாமி அதிரடியாக நியமிக்கப்பட்டுள்ளார். வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலின் போது தூத்துக்குடி வடக்கு மாவட்ட காங்கிரஸ் சார்பில் கூட்டணி கட்சியினருடன் இணைந்து தீவிரமாக தேர்தல் களத்தில் ஈடுபடுவார் என்பதில் மாற்றுக் கருத்து இல்ல என காங்கிரஸ் மூத்த நிர்வாகிகளும் இளைஞர்களும் தெரிவிக்கிறார்கள். காங்கிரஸ் தலைவராக பெருமாள்சாமி நியமிக்கப்பட்டதால் தூத்துக்குடியில் காங்கிரஸ் கட்சியினர், மூத்த நிர்வாகிகள், இளைஞர்கள் மிகுந்த உற்சாகத்துடன் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

# மதுராந்தகத்தில் அதிமுக சார்பில் மாபெரும் கிரிக்கெட் போட்டி

## வெற்றி பெற்றவர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் பரிசுகள் வழங்கினார்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் நகர கழகம் சார்பில் ஐய்யனார் கோயில் என்ற இடத்தில் அதிமுக சார்பில்புரட்சித்தலைவர் எம்ஜிஆர் புரட்சித்தலைவி அம்மா புரட்சி தமிழர் எடப்பாடியார் அவர்களுடைய பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு

பரிசுவழங்கும்நிகழ்ச்சியை மதுராந்தகம் நகர் கழக செயலாளர் பூக்கடை கே .சி .சரவணன் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தநிகழ்ச்சியில்சிறப்பு அழைப்பாளராக மதுராந்தகம் அதிமுக சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் கலந்து கொண்டு கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களுக்கு முதல் பரிசாக 25,000 கோப்பைகள் இரண்டாம்பரிசாக இருபதாயிரம் கோப்பைகள் மூன்றாம் பரிசாக 15,000 கோப்பைகள் நான்காவது பரிசாக பத்தாயிரம் கோப்பைகள் ஐந்தாம் பரிசாக ஐந்தாயிரம் ரூபாய் கோப்பைகள் இவர்களை அதிமுகசட்டமன்ற உறுப்பினர் வாங்கினார் இந்த நிகழ்ச்சியில் மதுராந்தகம் அம்மா பேரவை செயலாளர் வழக்கறிஞர் எம்பி சீனிவாசன், முன்னாள் கவுன்சிலர்கள் சித்தப்பா கிருஷ்ணன், பன்னீர்செல்வம், காதர் மொய்தின், மற்றும் எத்திராஜ், உமாபதி, ஆனந்த் , பரிமளா, முன்னாள் கவுன்சிலர்முருகம்மாள், சன்பாபு,அய்யனார்,அதிமுகநிர்வாகிகள் விளையாட்டு வீரர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் (19.01.2026) நடைபெற்ற திங்கள் கிழமை மக்கள் குறை களையும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டார்.

# வேளாண் குறைதீர்க்கும் நாள் கூட்டம் 23 ந் தேதி நடைபெறும்


## ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தகவல்




ஈரோடு மாவட்டத்தில் ஜனவரி 2026 ஆம் மாதத்திற்கான வேளாண் குறைதீர்க்கும் நாள் கூட்டம்மாவட்டஆட்சியர் அலுவலக இரண்டாம் தள கூட்ட அரங்கில் 23.01.2026 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற உள்ளது. அன்றைய தினம் காலை 10.00 மணி முதல் 11.30 வரை மனுக்கள் பெறப்படும். 11.30 மணி முதல் 12.30 மணி வரை விவசாய சங்கப் பிரதிநிதிகள் விவசாயம் தொடர்பான தங்களது பகுதி பிரச்சினைகள் குறித்து கருத்துக்கள் தெரிவிக்கலாம். அலுவலர்களின் விளக்கங்களும் பிற்பகல் 12.30 முதல் 1.30 முடிய தெரிவிக்கப்படவுள்ளது. இக்கூட்டத்தில் விவசாய பெருமக்கள் கலந்துகொண்டு பயன்பெற மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

# மானாமதுரை இலங்கை அகதிகள் முகாமில் இளைஞர் ஒருவரை வாளால் தாக்கிவிட்டு தப்பிச்சென்ற மர்மம் நபர்கள்







சிவகங்கை மாவட்டம் மானாமதுரை மூங்கில் ஊரணியில் உள்ள இலங்கை அகதிகள் முகாமில் வசித்து வரும் செல்லதுரை மகன் ஜெயேந்திரன் (44) என்பவரை அடையாளம் தெரியாத ஆர்15 இருசக்கர வாகனத்தில் வந்த 3 மர்ம நபர்கள் முகாமின் உள்ளேயே இருசக்கர வாகனத்தில் சென்றவரை வழிமறித்து வாள் உள்ளிட்ட கூர்மையான ஆயுதங்களைகொண்டுபலமாகவெட்டியும்,தாக்கியும் விட்டு தப்பிச் சென்றனர். இச்சம்பவத்தில் தலையில் பலத்த ரத்த காயங்களுடன், கைகளில் காயம் மற்றும் வீக்கங்களுடன் இருந்த ஜெயேந்திரனை சம்பவ இடத்திற்குவிரைந்துசென்று மீட்ட மானாமதுரைநகர் காவல்துறையினர் உடனடியாக 108 ஆம்புலன்ஸ் வாகனம் மூலமாக மானாமதுரை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். அம்மர்ம நபர்கள் ஜெயேந்திரனின் இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களை அடித்து நொறுக்கியும் உள்ளனர்.அதே மர்ம நபர்கள் ஜெயந்திரனின் வீட்டையும் அடித்து நொறுக்கியதாகவும், சமீபத்தில் சில நகர்கள் ஜெயந்திரனிடம் தகராறில் ஈடுபட்டானர் என்று அப்பகுதி பொதுமக்கள் தெரிவித்தனர். மேலும் இச்சம்பவம் குறித்து வழக்கு பதிவு செய்த மானாமதுரை காவல்துறையினர் அடையாளம் தெரியாத மர்ம நபர்கள் குறித்து வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றது.

# தாறுமாறாக ஓடும் மினி பஸ்

## பல்வேறு புகாரளித்த பிறகும்கூட வேடிக்கை பார்க்கும் போக்குவரத்துத்துறை



திருப்பூரில் மினி பஸ் கட்டண கொள்ளையை தடுத்து நிறுத்தி அனைத்து மினி பஸ்களும் அனுமதித்த வழித்தட வரைபடங்களையும், கட்டண விபரங்களையும் மினி பஸ்ஸில் அவசியம் காட்சிப்படுத்தி அனுமதித்த வழித்தடங்களில் மட்டுமே இயங்கவும், மினி பஸ்களில் அரசின் சட்டத்தை மீறி அதிக கட்டணங்கள் வசூலித்து வருவது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

திருப்பூரில் பல மினி பஸ்கள், மத்திய பஸ் ஸ்டாண்ட், கோவில் வழி, புதிய பஸ் ஸ்டாண்ட் ஆகிய மூன்று பஸ் ஸ்டாண்ட்களை கடந்து, வெளியே செல்லவில்லை. ஏற்கனவே பஸ்கள் இயங்கிக்கொண்டிருக்கும் மெயின் ரோடுகளையே, தொடர்ச்சியாக செல்கின்றன.

திருப்பூர்நகரபகுதிகளில்இயக்கப்படும்பெரும்பாலான மினி பஸ்கள், அனுமதிக்கப்பட்ட வழித்தடங்களில் இயங்குவதில்லை. பர்மிட் இல்லாத மாற்று வழித்தடங்களில் செல்கின்றன.

அரசு உத்தரவை மீறி குறைந்தபட்ச கட்டணமாகரூ.12-ம் அதிகபட்சமாக ரூ.15, ரூ 20 வரையும் பயணியருக்கு ஏற்றவாறு, ரூ.15 முதல் ரூ.20 , 25 ரூபாய் வரை இஷ்டம் போல் வசூலிக்கின்றனர்.

அதேசமயம், கூலித்தொழிலாளர்கள், விவசாயிகளுக்குத்தான் இந்த கட்டண உயர்வால் கடும் சிரமம் ஏற்பட்டுள்ளது ஏற்கனவே தொழில் சரியில்லை தொழிலாளர்கள் மினி பஸ்களையே நம்பியுள்ளதால், கட்டண உயர்வு அவர்களுக்கு கூடுதல் சுமையாக மாறியுள்ளது.

எனவே திருப்பூரில் அனைத்து மினி பஸ்களும் அனுமதி வழங்கப்பட்ட வழித்தடங்களில் இயங்காமல் விதியை மீறி மாற்று வழித்தடங்களில் இயக்கப்பட்டு வரும்மினிபஸ்கள்மீதும்கூடுதல்கட்டணம்வசூலிக்கும் மினி பஸ்கள் மீதும் உடனடியாக உரிய நடவடிக்கைகள் எடுப்பதை உறுதி செய்ய வேண்டுமென திருப்பூர் நுகர்வோர் நல முன்னேற்ற சங்கம் சார்பில் கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறாக அதில் கூறப்பட்டுள்ளது



## தூத்துக்குடியில் பள்ளி மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கிய அமைச்சர் கீதாஜீவன்

தூத்துக்குடி சாமுவேல்புரம் பகுதியில் உள்ள மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் 11ஆம் வகுப்பு படிக்கும் 88 மாணவர்களுக்கு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை அமைச்சர் கீதா ஜீவன் கலந்துகொண்டு விலையில்லாமிதிவண்டிகளை வழங்கினார். அமைச்சர் கீதா ஜீவன் பேசுகையில்: ஒவ்வொரு ஆண்டும் மாணவ மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டு வருவதாகவும், இந்தமிதிவண்டிமாணவ மாணவிகளுக்கு உடல் ஆரோக்கியத்திற்கு மிக அவசியமாக உள்ளது. பள்ளிக்கு வரும்போது மாணவ மாணவிகள் காலை உணவு கண்டிப்பாக சாப்பிட வேண்டும் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தனியார் பள்ளிகளுக்கு காலை உணவுத் திட்டத்தை தொடங்கப்பட்டது மாணவ மாணவிகள் காலையில் உணவு சாப்பிடாமல் வருவதால் இந்தத் திட்டம் தொடங்கியது. ஆகவே காலை உணவு மிக அவசியம் உடல் ஆரோக்கியத்திற்கும் தேவையான ஒன்று காலை உணவு மேலும் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் ஆட்சியில் அரசு உதவி பெறும் பள்ளியில் எல்லா வசதியும் கல்விக்கான பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருவதாகவும்,தரமான கல்வியை வழங்கி வருவதாகவும் மேலும் திறன் மேம்பாட்டு பயிற்சி, நான் முதல்வன் திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களைக் கொண்டு கல்வித்துறையை மேம்படுத்தி வருவதாகவும், தரமான கல்வி வழங்கும் அரசாக திராவிட மாடலாக அரசு திகழ்ந்து வருவதாகவும் அமைச்சர் கீதா ஜீவன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தூத்துக்குடி மாநகராட்சி உதவி ஆணையர் வெங்கட் ராமன், பள்ளியின் தலைமை ஆசிரியர் ரூபினா ரொபினோ, உதவி தலைமை ஆசிரியர் கிரேஸ் கெத்சிபாய், மாநகராட்சி கவுன்சிலர் மெட்டில்டா, முதன்மை கல்வி அலுவலர் சங்கிதா சின்னராணி,பகுதி திமுக செயலாளர் ஜெயக்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேலும் ஆசிரியர்கள், பள்ளி நிர்வாகிகள் மற்றும் மாணவ, மாணவிகள் பலர்கலந்துகொண்டனர்.



ஈரோடு மாநகர் பெரியசேமூர் பகுதி எஸ்.எஸ்.பி. நகரில் பகுதியில் திமுக சார்பில் நடைபெற்ற தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு விளையாட்டுப் போட்டி நடைபெற்றது . இந்த விளையாட்டு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு ஈரோடு மாநகர மேயர் நாகரத்தினம் சுப்பிரமணி பரிசுகளை வழங்கினார்.

## ஈரோடு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறிவழிகாட்டும் மையத்தில் தனியார்துறை சார்பில் வேலைவாய்ப்பு முகாம்

ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் சுகந்தசாமி செய்திக்குறிப்பு- ஈரோடு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும்தொழில் நெறிவழிகாட்டும் மையத்தில் ஒவ்வொரு மாதமும் மூன்றாம் வெள்ளிக்கிழமை அன்று தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இவ்வேலைவாய்ப்பு முகாமில் பல்வேறு தனியார்துறை வேலை அளிப்பவர்கள் கலந்து கொண்டு தங்களுக்குத் தேவையான எழுதப்படிக்க தெரிந்த நபர்கள் முதல் பட்டப்படிப்பு படித்த நபர்கள் வரை மற்றும் செவிலியர்கள், டெய்லர்கள், கணினிஇயக்குபவர்கள்,

தட்டச்சர்கள், ஓட்டுநர்கள் போன்ற பணிகளுக்கு தகுதியுள்ள நபர்களை தேர்வு செய்து தனியார்துறையில் பணியமர்த்தம் செய்யப்பட்டு வருகின்றனர். இதன் மூலம் மாதந்தோறும் 100 க்கும் மேற்பட்ட பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.மேலும்,திறன் பயிற்சி



அளிக்கும் நிறுவனங்களும் கலந்து கொண்டு திறன் பயிற்சிக்கு தேவையான நபர்களை தேர்வு செய்து பயிற்சி அளித்து வருகின்றனர்.

அதன் இம்மாதம் 23.01.2026 வெள்ளிக்கிழமை அன்று சிறிய அளவிலான தனியார்துறை வேலைவாய்ப்புமுகாம் காலை 10.00 மணி முதல் மதியம் 3.00 மணி வரை ஈரோடு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் நடைபெறவுள்ளது.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் வாயிலாக நடத்தப்படும் இவ் வேலைவாய்ப்புமுகாம், வேலைநாடுநர்கள் மற்றும் வேலைஅளிப்பவர்களுக்கு தனியார்துறையில் பணிபுரிய ஆர்வமாக உள்ள முற்றிலும் இலவசமாகசெயல்படுத்தப்படுகிறது. எனவே, ஈரோடு மாவட்டத்தில் அனைவரும் இந்தவேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு பயனடையுமாறும், இம்முகாமின் செயல்பாடும்அலுவலகபதிவெண் இரத்து வாயிலாக தேர்ந்தெடுக்கப்பட்டு தனியார்துறையில் பணியமர்த்தம் வேலைநாடுநர்களின் வேலைவாய்ப்பு செய்யப்பட மாட்டாது என்றும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு ஈரோடு மாவட்ட வேலைவாய்ப்பு நேரிலோ அல்லது மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தினை தொலைபேசி எண் 8675412356, 9499055942 : erodemegajobfair@gmail.com w decgc_erode , Instagram Page வாயிலாகவும் தொடர்புகொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

## சமயநல்லூர் அருகே அரசு பேருந்து கவிழ்ந்து விபத்து: 6 பக்தர்கள் படுகாயம்

மதுரை ஆரப்பாளையம் பேருந்து நிலையத்தில் இருந்து நேற்று காலை 11.45 மணிக்கு பழனிக்கு அரசுப் பேருந்து ஒன்று புறப்பட்டுச் சென்றது.

இந்தப் பேருந்தில் பழனி முருகன் கோயிலுக்கு சென்ற பக்தர்கள் உட்பட 55பேர்பயணித்தனர். இந்தப் பேருந்தை சுப்புராஜ் என்பவர் ஓட்டிச் சென்றார். நடத்துநர் கண்ணன் பயணிகளுக்கு டிக்கெட் கொடுத்து கொண்டிருந்தார்.

மதுரை - திண்டுக்கல் நான்கு வழிச்சாலையில் சமயநல்லூர் மேம்பாலத்தை கடந்து கட்டப்புலி நகரில் சென்றபோது, திடீரென ஸ்டியரிங் பழுதானது. உடனே சுதாரித்துக் கொண்ட ஓட்டுநர் பேருந்தை நிறுத்த முயன்றார். ஆனாலும் அவரது கட்டுப்பாட்டை இழந்து தடுப்புச் சுவரில் மோதி கவிழ்ந்தது. இடிபாடுக்குள் சிக்கிய பயணிகள் அலறி துடித்தனர்.

இதுகுறித்த தகவல் அறிந்த சமயநல்லூர் போலீஸார் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். விபத்தில் காயமடைந்த மதுரை கோயில் பாப்பாகுடி செல்வி (30), அப்துல்ரசாக் (70) மற்றும் பழனி கோயிலுக்குச் சென்ற பக்தர்கள் உள்ளிட்ட 15 பேரை மீட்டு மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதில் 6 பேர் படுகாயம் அடைந்தனர்.

### தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் தென்காசி மாவட்டம் கடையநல்லூர் பேட்டை கிளை சார்பில்

## செயல்பட்டு வரும் அந்நூர் பெண்கள் அரபிக் கல்லூரியின் 4 வது பட்டமளிப்பு மற்றும் சமூக விழிப்புணர்வு பொதுக்கூட்டம்

தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் தென்காசி மாவட்டம் கடையநல்லூர் பேட்டை கிளை சார்பில் செயல்பட்டு வரும் அந்நூர் பெண்கள் அரபிக் கல்லூரியின் 4 வது பட்டமளிப்பு மற்றும் சமூக விழிப்புணர்வு பொதுக்கூட்டம் கிளை செயலாளர் அப்துல் மாலிக் தலைமையில் மாவட்ட தலைவர் அப்துல் ஸலாம் மாவட்ட செயலாளர் ஜலாலுதீன் மாவட்ட பொருளாளர் அன்வர் சாதிக் மாவட்ட துணைத் தலைவர் அப்துல் பாஸித் மாவட்ட துணை செயலாளர் பீர் மைதீன், முஹமதலி பிலால், அப்துல் பாசித், மருத்துவ அணி அப்துல்லாஹ், மாணவரணி ரபீக் ராஜா , தொண்டரணி சேக் தாவூத் மற்றும் பேட்டை கிளை தலைவர் நல்லூர் சுலைமான் செயலாளர் அப்துல் மாலிக் பொருளாளர் முஹம்மது சித்திக் ,துணைத் தலைவர் செவன் டேய்ஸ் மசூது துணை செயலாளர் அஜ்மல் மருத்துவ அணி பிலால் ஆகியோர் முன்னிலை வகித்தனர் இந்த பொதுக்கூட்டத்தில் TNTJ மாநில செயலாளர் அல் அமீன் இஸ்லாம் காட்டித்தந்த இளைய சமுதாயம் என்கிற தலைப்பிலும்

மாநில செயலாளர் C.V இம்ரான் அவர்கள் இஸ்லாத்தில் மங்கையரின் பங்கு என்கிற தலைப்பில் உரையாற்றினர் நூற்றுக்கணக்காண ஆண்களும்

பெண்களும் இளைஞர்களும் பங்குபெற்ற இந்த பொதுக்கூட்டத்தில் கீழ்காணும் தீர்மானங்கள் நிறைவேற்ற ப்பட்டன

*ராக்கெட் ஏவுவதில் ஊழலா?*

1. பிரதமர் அலுவலகத்தின் முறைகேடுகளால் உலகப்புகழ்பெற்ற இந்தியாவின் இஸ்ரோ(ISRO) நிறுவனத்தின் செயல்பாடுகள் சமீபகாலமாக

பாதிக்கப்பட்டுள்ளன, அப்துல் கலாம், மயில்சாமி அண்ணாதுறை, உள்ளிட்ட தலைசிறந்த விஞ்ஞானிகள் பணியாற்றிய ISRO வால் இதுவரை ஏவப்பட்ட PSLV செயற்கைகோள்கள் 90 சதவீதத்திற்கும் மேலாக வெற்றியே பெற்றுள்ளன, ஆனால் கடந்த 6 தடவை ஏவப்பட்ட பல்வேறு செயற்கைகோள்களில் மூன்று தோல்வியடைந்துள்ளது, ISRO வரலாற்றில் இப்படிப்பட்ட தொடர் தோல்விகள் இருந்ததில்லை, அதே நேரத்தில் தோல்வியை விசாரிக்க அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையை இதுவரை வெளியிடாமல் பிரதமர் அலுவலகம் மவுனம் காப்பதும் , தோல்விக்குக்கு காரணமான பாகங்கள் ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தினுடையது என்பதும் மேலும் சந்தேகத்தை எழுப்புகின்றன, மக்களின் வரிப்பணத்தை பாழாக்கும் வகையிலும், முறைகேடுகளை ஊக்குவிக்கும் வகையிலும் செயல்படும் மோடியின் செயலை இப்பொதுக்கூட்டத்தின் வாயிலாக வன்மையாக




கண்டிக்கின்றோம்

*சந்ததிகளை அழிக்கும் சாராய விற்பனை*

2. பொங்கல் தினத்தை ஒட்டிய இரண்டு நாட்களில் மட்டும் 518 கோடி ரூபாய்க்கு மது விற்பனை தமிழகத்தில் நடந்துள்ளதாகவும், சென்னை

மதுவிற்பனையில் தமிழகத்திலேயே முதலிடம் என்று செய்திகள் வருகின்றன, குடும்பத்தினரோடு மகிழ்ச்சியாக நேரம் செலவழிக்க வேண்டிய விடுமுறைக்காலங்களில் கூட அவர்களை போதை வயப்படுத்தி அதன் மூலமாக வருமானத்தை ஈட்டுவது மிகவும் அவமானகரமான ஒரு செயல், பல குடும்பங்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் இந்த மதுவை தமிழகத்தில் முழுமையாக தடை செய்ய வேண்டும் என இந்த இப் பொதுக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்கின்றோம்.

திருப்பரங்குன்றம் டிவிஷன் பெஞ்ச் தீர்ப்பு

3. திருப்பரங்குன்றம் மலை சம்பந்தமாக தனி நீதிபதியின் தீர்ப்பை உறுதி செய்யும் டிவிஷன் பெஞ்சின் சமீபத்திய தீர்ப்பு பெருத்த ஏமாற்றமளிக்கிறது, நூறாண்டுகளாக இருக்கும் ஹிந்து மக்களின் பழக்கத்திற்கும்,முன்னர் வந்த தீர்ப்புகளுக்கும் எதிராக இந்த தீர்ப்பு அமைந்துள்ளது, எல்லாவற்றிற்கும் மேலாக பெரும்பான்மை ஹிந்து மக்களின் எண்ண ஓட்டங்களுக்கு எதிராகவும் சங்கபரிவார சக்திகளின் எண்ணத்திற்கு ஆதரவாகவும் இத்தீர்ப்பு அமைந்துள்ளது நடுநிலையாளர்களின் உள்ளத்தில் பெரும் கவலையை ஏற்படுத்துகிறது

தமிழக மக்களிடம் நிலவும் மத நல்லிணக்கத்தை பேணும் வகையில் உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட வேண்டும் என இப் பொதுக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்கிறோம்

இட ஒதுக்கீடு கோரிக்கை

4. கடந்த தேர்தலின் போது இஸ்லாமியர்களுக்கு இட ஒதுக்கீட்டை அதிகரித்து தருவோம் எனதிமுகதனது தேர்தல் அறிக்கையில் கூறி இருந்தது,இஸ்லாமியர்களின் நெடு நாளைய கோரிக்கையை நிறைவேற்றாமல் மறு தேர்தலை நோக்கி இந்த ஆட்சி சென்று கொண்டிருக்கிறது, போராட்டம் நடத்தினால்தான் கோரிக்கைகள் செவியேற்கப்படும் என்பது நல்லாட்சிக்கு சான்று கூறாது, எனவே வரும் தேர்தலுக்கு முன் சிறுபான்மை இஸ்லாமியர்களின்ஜீவாதாரகோரிக்கையான இட ஒதுக்கீட்டை குறைந்தபட்சம் 5 சதவீதமாக அதிகரித்து தருவதன் மூலம் மட்டுமே இஸ்லாமியர்களின் ஏகோபித்த ஆதரவை இக்கூட்டணி பெற முடியும் என இந்த இப் பொதுக்கூட்டத்தின் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறோம்.

## விலையில்லா வேட்டி சேலை திட்டத்தை முறைகேடுகளின் திட்டமாக மாற்றி உள்ளார்

### முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் விமர்சனம்

சவால்விட்டுசொல்கிறேன் எந்த மேடையிலும் நீதிமன்றத்தில் விவாதிக்கதயார்- நான்காண்டுகளாக வேட்டி சேலை முறையாக வழங்கவில்லை,பெயரில் காந்தியை வைத்து கோச்சே போல் செயல்படுகிற அமைச்சர்விலையில்லா வேட்டி சேலை திட்டத்தைமுறைகேடுகளின் திட்டமாக மாற்றி உள்ளார்*

காளைவளப்போருக்கு ஆயிரம் ரூபாய் தருவேன் என்று அறிவித்து அஞ்சு வருஷம் ஆச்சு அஞ்சு பைசா தரல-அவர் சொல்வதை தண்ணீரில் தான் எழுத வேண்டும் ஜல்லிக்கட்டு வீரருக்கு அரசு பணி என முதல்வர் அறிவிப்பை விமர்சித்த முன்னாள் அமைச்சர் ஆர் பி உதயகுமார்

மதுரை மாவட்டம் திருமங்கலம் நடுவக்கோட்டை பகுதியில் இன்று முன்னாள் அமைச்சர் ஆர் பி உதயகுமார் 49 வது திண்ணை பிரச்சாரம் மேற்கொண்டார். எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அறிவித்த தேர்தல் அறிவிப்புகளை பொதுமக்களிடம் விளக்கி கூறினார் நிகழ்ச்சியின் முடிவில் கிராமமக்களுக்கு கரும்புகள் வழங்கினார்.இதில் ஏராளமான அதிமுகவினர் கலந்து கொண்டனர்.

பொங்கல் திருநாள் கைத்தறி நெசவாளர்கள் வாழ்வில் ஒளி ஏற்றவும் ஏழை எளிய மக்களுக்கு பொங்கல் பரிசு கொடுக்கின்ற வகையில் வேஸ்டி சேலை வழங்குவது புரட்சித்தலைவரால் தொடங்கப்பட்ட திட்டம். ஒரு கோடி 77 லட்சம் ஆண்களுக்கும் ஒரு கோடி 77 லட்சம் பெண்களுக்கும் வழங்க வேண்டும் அது கைத்தறி துறையில் டெண்டர் விடப்பட்டு நூல் வழங்கப்பட்ட வருவாய்த்துறையில் கொள்முதல் செய்து கூட்டுறவுத் துறையில் இருந்து கொடுக்க வேண்டும். நான் சவால் விட்டு சொல்கிறேன் கடந்த நான்கு நான்காண்டுகளாக பெயரில் காந்தியை வைத்துக்கொண்டு கோச்சே போல் செயல்படுகிற அமைச்சர் விலையில்லா வேட்டி சேலை திட்டத்தை ஒட்டுமொத்த முறைகேடுகளின் திட்டமாக மாற்றியுள்ளார்கள். சவால் விட்டு சொல்கிறேன் எந்த மேடையிலும் எந்த நீதிமன்றத்திலும் விவாதிக்க தயார் கடந்த நான்கு ஆண்டுகளாக முறையாக வேட்டி சேலை வழங்கவில்லை என்பது தான் உண்மை. நாங்கள் உற்பத்தியை செய்து கொடுத்துவிட்டோம்என கைத்தறித்துறை செல்கிறது எங்களுக்கு வரவில்லை என கூட்டுறவுத்துறை செல்கிறது. வருவாய்த்துறை வேடிக்கை பார்க்கிறது. இந்த ஆண்டும் முழுமையாக கொடுக்கவில்லை வேஸ்டி சேலையாவது இந்த அரசு வழங்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது?

திமுக தேர்தல் வாக்குறுதியை காப்பியடிக்க நிலைமை அதிமுகவுக்கு கிடையாது.அதிகஆண்டு ஆட்சியில் இருந்தது அண்ணா திமுக அதிமுகவைப் பார்த்து தான் திமுக காப்பி அடிக்கும். அவர்களை காப்பியடிக்கும் நிலைமை எப்போதும் அண்ணா திமுகவுக்கும் இல்லை.

தனியரசு சந்திப்பு தேமுதிக,டிடிவி கூட்டணிக்கு வருவார்களா குறித்த கேள்விக்கு: தை பிறந்தால் வழி பிறக்கும் 23ம்தேதிவரைபொறுத்து இருங்கள் இந்தியாவை வல்லரசு ஆக்குகிற இந்தியாவை எதிர்பார்க்கிற பீகார் மகாராஷ்டிரா கேரளா வெற்றியை தொடர்ந்து தமிழ்நாட்டிலும் மாபெரும் வெற்றியை என்டிஏ கூட்டணி அமைக்கும்.

பிரிந்து சென்றவர்



களை இணைக்கும் இடையில் பாஜக உள்ளதென செல்வராஜ் கூறியது குறித்த கேள்விக்கு: எங்க அண்ணன் சொன்னா அவரிடம் தான் கேட்கணும் என்கிட்ட கேட்டா? ஹைதராபாத்தில் இருக்கிறாரா இங்கேதான் இருக்கிறார் அவர் கிட்ட கேளுங்க முழுவிளக்கமும்சொல்லுவார். பிரதமர் முன் மேடையில் வரவுள்ள கூட்டணி கட்சித் தலைவர்கள் ஏறுவார்களா என்ற கேள்விக்கு பொறுத்திருந்து பாருங்கள் என்றார்.

பாலமேடு ஜல்லிக்கட்டு போட்டியில் உதயநிதி தாமதமாக வந்ததால் காளைகள் அதிகமாக அவிழ்க்க முடியவில்லை என்ற குற்றச்சாட்டு குறித்த கேள்விக்கு: இந்த ஆட்சியில் நடைபெறுகிற ஜல்லிக்கட்டு மக்களுக்காக நடத்தப்படுவது அல்ல. அமைச்சர் கருணாநிதி குடும்பத்துக்காக நடத்துகிற ஜல்லிக்கட்டு அதுக்கு இந்த ஆண்டு எண்டு கார்டு மக்கள் போட்டு விடுவார்கள் பிகினிங் கார்டு எடப்பாடியார் உள்ளூர் கிராம கமிட்டியுடன் இணைந்து அரசு உறுதுணையாக மக்களுக்கான ஜல்லிக்கட்டு நடைபெறும்.

ஜல்லிக்கட்டு வீரருக்கு அரசு பணி அறிவிப்பு கொடுத்த கேள்விக்கு: காலை வளர்ப்புவோருக்கு ஆயிரம் ரூபாய் தருவேன் அறிவித்து அஞ்சு வருஷம் ஆச்சு அஞ்சு பைசா தரல. நீட் தேர்வு,கல்வி கடன் ரத்து அறிவித்தார் செய்தாரா அவர் சொல்வதை தண்ணீரில் எழுத வேண்டியது தான் என்றார்.

முன்னதாக அதிமுகவின் திண்ணை பிரச்சாரம் கூட்டம் நடுவக்கோட்டையில் உள்ள அரசு பள்ளி முன்பு நடைபெற்றதாலும் ஒலிபெருக்கியின் அதிக சத்தத்தாலும் இரண்டு மணி நேரத்துக்கு மேலாக மாணவர்கள் கல்வி பாதிக்கப்பட்டது. மாணவர்கள் கல்வி கற்க முடியாமல் அவதி அடைந்தனர்



## ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தார்

ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நேற்று (19.01.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

இக்குறைதீர்க்கும் நாள்கூட்டத்தில்விதவை உதவித்தொகை,கருணை அடிப்படையில் வேலை, மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை, இலவச வீட்டுமனை பட்டா, பட்டா மாறுதல், விலையில்லா தையல் இயந்திரம், ஆக்கிரமிப்பு மற்றும் காவல் துறை நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் என மொத்தம் 175 மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்று உரியதுறைஅலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) செல்வராஜ், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் முரளி, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மகேஸ்வரி உட்பட அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஈரோடு கலெக்டர் ச.கந்தசாமி தலைமையில்

## தை 5 காலிங்கராயன் தினத்தை முன்னிட்டு காலிங்கராயன் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்



ஈரோடு மாவட்டம், பவானி காலிங்கராயன் அணைக்கட்டு பகுதியில் உள்ள காலிங்கராயன் மணிமண்டபத்தில் நேற்று (19.01.2026) தை-5 காலிங்கராயன்தினத்தை முன்னிட்டு நதிநீர் இணைப்பிற்கு முன்னோடி என போற்றப்படும் காலிங்கராயன் திருவுருவ சிலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

ஈரோடு மாவட்டம். வெள்ளோடு கனகபுரத்தில் பிறந்த காலிங்கராயன் காலிங்கராயன்பாளையத்திலிருந்து அவர்கள் பவானி ஆற்றின் குறுக்கே ஆவுடையார்பாறை வரை சுமார் ஏறத்தாழ57கிலோமீட்டர் நீளத்திற்கு தடுப்பணை கட்டி கி.பி. 1282-ம் ஆண்டு தை-5ம் நாள் தான் உருவாக்கிய அணைக்கட்டையும், வாய்க்காலையும் உலகுக்கு அர்பணித்ததால் அந்த நாள் (தை 5) காலிங்கராயன் தினமாக கொண்டாடப்படுகிறது. பவானி, நொய்யல், அமராவதி ஆகிய ஆறுகளை தான் வெட்டிய கால்வாயின் மூலம் இணைக்க காலிங்கராயன் அவர்கள் முற்பட்டார். 13 ஆம் நூற்றாண்டில் நதி நீர் இணைப்பிற்கு வித்திட்டவர் காலிங்கராயன் அவர்கள்.

மேலும், காலிங்கராயன் அமைக்கப்பட்ட காலிங்கராயன் அணைக்கட்டு பகுதியில் உள்ள காலிங்கராயன் மணிமண்டபத்தில்அன்னாரது திருவுருவச்சிலைக்கு ஆண்டுதோறும்தை5-ம் நாள் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்றைய தினம் மாவட்ட ஆட்சித்தலைவர் அன்னாரது திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து. மலர்தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து, வள்ளி கும்மியாட்டம் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்குசட்டமன்றஉறுப்பினர் வி.சி.சந்திரகுமார், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஈ.ஆர். ஈஸ்வரன், ஈரோடு மாநகராட்சிமேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், கண்காணிப்பு பொறியாளர் கோபி,செயற்பொறியாளர் திருமூர்த்தி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அ.சுகுமார் ,உதவி செயற்பொறியாளர் உதயகுமார், பவானி நகர மன்ற தலைவர் சிந்துாரி இளங்கோ.ஈரோடு வட்டாட்சியர் முத்துக்கிருஷ்ணன், உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள், காலிங்கராயன் அவர்களின் வாரிசுதாரரர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (19.01.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 12.07.2025 அன்று 20252026 வரைக்கான காலிப்பணியிடங்களுக்கு நடத்திய ஒருங்கிணைந்த சார்நிலைப் பணிகள் தொகுதி IV போட்டித் தேர்வு மூலம் இளநிலை உதவியாளர்களாக தேர்வு செய்து ஒதுக்கீடு செய்யப்பட்டவர்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில் இளநிலை உதவியாளர் பணியிடங்களுக்கு பணிநியமனம் செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணை வழங்கி வாழ்த்துக்கள் தெரிவித்தார். உடன் திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) பிரியா, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி)த.ரமேஷ்கிருஷ்ணன் ஆகியோர் உள்ளனர்.

செங்கல்பட்டு மாவட்டம் சித்தாமூர் அடுத்த பழவூர் மற்றும் பூங்குணம் கிராமத்தில்

## தமிழக வெற்றிக்கழகம் சார்பில் சமத்துவ பொங்கல் விழா



செங்கல்பட்டு மாவட்டம் சித்தாமூர் அடுத்த பழவூர் மற்றும்,பூங்குணம் கிராமத்தில் வித்தியாசமான முறையில் நடைபெற்ற சமத்துவ பொங்கல்

தை மாதம் வரக்கூடிய பொங்கல் திருநாளை தமிழக முழுவதும் ஆங்காங்கே சமத்துவ பொங்கல் ஆகக் கொண்டாடுவது வழக்கம் அதன் ஒரு பகுதியாக இன்று சித்தாமூர் அடுத்த பூங்குணம் கிராமத்தில் ஒரு கிராமமே ஒன்றுகூடி பொங்கல் வைத்து கொண்டாடினர்

பின்பு தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் நடிகர்விஜய்அவர்கள் 33 ஆம் ஆண்டு சினிமா துறையில் அடி எடுத்து வைத்ததை கொண்டாடும் வகையில் 33 பொருட்களான பிரிட்ஜ், கிரைண்டர்,ஃபேன்,நாற்காலி, போன்ற பொருட்கள் குலுக்கல் பரிசாக கொடுக்கப்பட்டது, பின்பு அனைத்து கிராம மக்களுக்கும் தமிழக வெற்றி கழகம் சார்பாக பொங்கல் தொகுப்புகள் வழங்கப்பட்டது

இந்நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் மோகன்ராஜா,சித்தாமூர் ஒன்றிய தலைவர் துரை, அச்சரப்பாக்கம் ஒன்றிய செயலாளர் செந்தில்குமார், ஆகியோர் கலந்து கொண்டனர்

நிகழ்ச்சியின் ஏற்பாட்டினை அறிவழகன், நிகழ்ச்சியின் தொகுப்பு பூங்குனம் ஊராட்சியின் கிளைக் கழக நிர்வாகி விக்னேஸ்வரி கார்த்திக் செய்திருந்தார் இந்நிகழ்ச்சியில் தமிழக வெற்றி கழகம் கட்சியின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



சேலம் மாவட்டம் தொளசம்பட்டியில் எழுந்தருளியுள்ள அருள்மிகு ஸ்ரீ அப்ரமேய பெருமாள் திருக்கோவிலில் ஸ்ரீ துளசி அலமேலுமங்காசமேதஅப்ரமேயபெருமாள்சுவாமிக்குதேர்த்திருவிழாவைமுன்னிட்டுகிராமசாந்திநிகழ்வுநடைபெற்றது அதனை தொடர்ந்து இன்று புண்ணியாசனையும் நடைபெற்றது சாமிக்கு சிறப்பு அபிஷேக ஆராதனை மற்றும் சிறப்பான அலங்காரம் நடைபெற்றது சுற்றுவட்டார பகுதியில் உள்ள திரளான பக்த கோடிகள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர்



காரைக்குடிமாநகரில் மாவட்ட திமுக சுற்றுச்சூழல்அணி சார்பாக மாவட்ட துணைஅமைப்பாளர் சாய் சுரேஷ் ஏற்பாடு செய்திருந்த 2026, புத்தாண்டுதிராவிட பொங்கல்விழா. போட்டியிடில்கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு. கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன்பரிகளை வழங்கி வாழ்த்தினார். முன்னாள் அமைச்சர்மு.தென்னவன்,மாநகராட்சி துணைமேயரும்.மாநகரதிமுகசெயலாளருமானநா. குணசேகரன்ஆகியோர் முன்னிலை வைத்தனர். சிறப்புஅழைப்பாளராககாரைக்குடிசட்டமன்றஉறுப்பினர் எஸ்.மாங்குடிகலந்து கொண்டுவெற்றிபெற்றவர்களுக்குவாழ்த்துக்களைதெரிவித்துக் கொண்டார்.மாமன்ற உறுப்பினர்கள் அன்னைமைக்கேல், தெய்வானைஉள்பட முக்கியநிர்வாகிகள்உடன்கலந்து கொண்டனர் .விளையாட்போட்டிகள்காரைக்குடி மாநகராட்சி 36வார்டுகளை 8 இடங்களாகஉள்ளடக்கிகோலப்போட்டிகள்நடைபெற்றது. முன்னதாகமுன்னாள் அமைச்சர் மு.தென்னவன் தலைமை தாங்கி போட்டிகளைதொடங்கி வைத்தார். போட்டியில்முதல் பரிசு5000 ம் 2வது பரிசு 3000ம் 3வது பரிசு 2000ம்மற்றும் சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டது.

அச்சிறுப்பாக்கம்

## மார்வார் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 2001 ம் ஆண்டு முன்னாள் மாணவர் சந்திப்பு



செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் மார்வர் ஆண்கள்மேல்நிலைப்பள்ளியில், 2001 ஆம் ஆண்டு கல்வி பயின்ற 12 ஆம் வகுப்பு மாணவர்களின் முன்னாள் மாணவர் சந்திப்பு நிகழ்ச்சி வெகு விமர்சையாக நடைபெற்றது. அச்சிறுப்பாக்கம் மார்வர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் கடந்த 25 ஆண்டுகளுக்கு முன் கல்விபயின்றமுன்னால் மாணவர் சந்திப்பு நிகழ்ச்சி பள்ளி ஆசிரியர்களை கௌரவிக்கும் விதமாகசால்வைஅணிவித்துமரியாதைசெலுத்தப்பட்டது.மேலும் அரசு பள்ளி மாணவர்களின் நலன் கருதி இரண்டு லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்பில் கண்காணிப்பு கேமரா பொருத்தும் வகையில் பள்ளி தலைமை ஆசிரியரிடம் முன்னாள் மாணவர்கள் வங்கி காசோலை வழங்கினர். இதில், முன்னாள் மாணவர்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டு தங்களின் பள்ளி காலநிகழ்வுகளை நினைவுகூர்ந்தனர்.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.